# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 22 ஞாயிற்றுக்கிழமை 13.07.2025 கதிர் 246




## இது ரகசியம் அல்ல!

முன்னாள் அமைச்சர் மீது ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அவர்களில் சிலர் நீதிமன்றங்களால் ☞ 2

# ஆடைத் தொழில்துறை பெரும் நெருக்கடியில் இந்தியாவிடமும் உதவி பெறமுடியாத நிலை

### அமெ. வரி குறித்து ரணில் விக்கிரமசிங்க கவலை

அமெரிக்க அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்புகளால் நாட்டின் ஆடைத் தொழிற்துறை தற்போது பெரும் நெருக்கடியின் அறிகுறிகளைக் காட்டுகிறது. இந்தியாவுடன் கையெழுத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகாததால் எமக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடி ஏற்படும் என முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆடை தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள உயர்மட்ட தொழிலதிபர்களை சந்தித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார். இந்தசந்திப்பின் போது அமெரிக்க அரசுத்தலைவர் டொனால்ட் டிரம்பின் வரி விதிப்புகளால் நாட்டின் ஆடைத் தொழிற்துறை தற்போது பெரும் நெருக்கடியின் அறிகுறிகளைக் காட்டுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

நமது பொருளாதாரம் ஆடைகள் மற்றும் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதால் கிடைக்கும் அந்நிய செலாவணியை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு பொருளாதாரத்தை வெறுமனே ஆடை ஏற்றுமதியால் மாத்திரம் இயக்க முடியும் என்று எண்ணினால் அது தவறு.

அடுத்த ஆண்டு ஐரோப்பாவில் பொருளாதார சரிவு ☞ 2

# ராஜிதவைக் கைது செய்ய பிடியாணை பெற முயற்சி

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகை வழங்கி ஆளும்தரப்புக்கு இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாக ☞ 2

# எல்லை தாண்டிய குற்றத்தில் இந்திய மீனவர் 7 பேர் கைது

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து நேற்றுக் காலை விசைப்படகில் மீனவர்கள் மீன் பிடிக்க சென்றனர்.

காங்கேசன்துறை வட மேற்கு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் அதிலிருந்த ஏழு மீனவர்கள் எல்லை தாண்டி ☞ 2

# இலங்கையை பிரிக்கும் இந்தியாவின் முயற்சி மாற்றமின்றித் தொடர்கிறது

### தம்மரத்ன தேரர் தெரிவிப்பு

**இலங்கையைப் பிரிக்கும் இந்தியாவின் முயற்சி இன்றும் மாற்றமின்றி தொடர்வதாக பேராசிரியர் இந்துராகரே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.**

**இந்திய ஆளும்தரப்பு இதற்காக பல்வேறு உத்திகளைத் கையாள்வதாக தேரர் குறிப்பிட்டுள்ளார்.**

**கொக்காவில் தாக்குதலின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே பேராசிரியர் இந்துராகரே தம்மரதன தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.**

**நாட்டைப் பிரிக்கவேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு ஒரு தசம புள்ளிக் கூட மாறவில்லை. இந்தியா இப்போது இலங்கைக்கு 300 பில்லியன் ரூபா கடன் நிவாரணம் வழங்கப் போகிறது. இலங்கை இந்தியாவிற்கு** ☞ 2

# கேட்ஸ் அறக்கட்டளை பிரதிநிதிகள் பிரதமர் ஹரினியை சந்தித்து பேச்சு

அமெரிக்க கேட்ஸ் அறக்கட்டளையின் (Bill - Melinda Gates Foundation) உலகளாவிய மேம்பாட்டுத் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினருக்கும் பிரதமருக்கும் இடையேயான சந்திப்பு வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்தசந்திப்பின்போது, கேட்ஸ்அறக்கட்டளையின் உலகளாவிய மேம்பாட்டுத் தலைவர் கலாநிதி கிறிஸ் எலாயஸ், இது தனது இலங்கைக்கான முதல் விஜயம் என்றும், நாடாளுமன்றத்தில் இந்த முக்கிய கலந்துரையாடலில் பங்கேற்க அழைப்பு விடுத்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார்.

கலாநிதி எலாயஸ் மேலும் கூறுகையில், ☞ 2

# பிள்ளைகளுக்கு உணவு வாங்கி வர சென்றவர் வீதி விபத்தில் பரிதாப சாவு

பிள்ளைகளுக்கு உணவு வாங்கி வரச் சென்றவர் வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை காப்பாளரான , நயினாதீவை சேர்ந்த பாலேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்தில் பிள்ளைகளுக்கு ☞ 2

# பாக். இராணுவத் தளபதி அடுத்த வாரம் வருகை

பாகிஸ்தானின் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளார். ஜூலை 21 வரும் அவர் 23 வரை தங்கியிருப்பதோடு பல முக்கிய சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த விஜயம் அமைந்துள்ளது.

பாக்கிஸ்தான் இராணுவத்தளபதி தனது விஜயத்தின் போது அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பாதுகாப்பு செயலாளர் எயா வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ☞ 6

# பிரித்தானியாவின் கரிசனைக்கு சஜித் பிரேமதாச நன்றி தெரிவிப்பு

உலகளாவிய வர்த்தகம் கடினமாக இருக்கும் நேரத்தில் பிரித்தானியா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை ஆதரித்து வருகிறது. பிரித்தானியாவின் இந்த கரிசணைக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசுத் தலைவர் டொனால்ட் டிரம்ப் இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதிசெய்யப்படும் சகல பொருட்களுக்கும் 30 வீத பரஸ்பர தீர்வை வரியை விதித்துள்ளார். ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து இந்த வரி நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களிலிருந்து ☞ 2

# அமெரிக்க வரியை மேலும் குறைக்க அதனுடனான பேச்சுக்கள் தொடரும்

### அரசுத் தலைவர் அநுரகுமார அறிவிப்பு

அமெரிக்காவுடனான பேச்சுக்களின் விளைவாக விதிக்கப்பட்டிருந்த தீர்வை வரி விகிதத்தை 44 வீதத்திலிருந்து 30 வீதமாகக் குறைக்க முடிந்துள்ளதாகவும் அந்த பேச்சுக்களை தொடர்வதன் மூலம் மேலும் சலுகைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதன்போது இந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் வர்த்தக சமூகம் மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் சாதகமான திருத்தங்களை மேற்கொள்வதே அரசாங்கத்தின் விருப்பமாகும் என்றும் அரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் முன்னேற்றம்இ தற்போதைய நிலைமை மற்றும் இந்தத் தீர்வை வரிக்கொள்கை செயல்படுத்துவதுடன் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் தொடர்பில் ஏற்றுமதிக்

# அடுத்த அமெ. தூதராக எரிக்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கின் பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் முடிவுக்குவரவுள்ள நிலையில், அடுத்த அமெரிக்கத் தூதுவராக எரிக் மெயரின் பெயரை அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் முன்மொழிந்துள்ளார்.

அதன்படி அரசுத் தலைவர் ட்ரம்பின் முன்மொழிவு அமெரிக்க செனெட்டின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவை சேர்ந்த இராஜதந்திரியான எரிக் மெயர், தற்போது அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரியாகப் பணியாற்றிவருகிறார். அதன்படி அவர் பணியகத்தின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதுடன் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், மாலைதீவி, நேபாளம், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தண்டிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் பிரச்சினை என்னவென்றால் கைது செய்யப்படுபவர்களும் தண்டனை பெறுபவர்களும் மோசடி செய்தார்கள் என்று சொல்லப்படும் பணம் சில கோடி ரூபாய்களாக மட்டுமே இருப்பதுதான். இதுவரைக்கும் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் செய்தார்கள் என்று பேசப்பட்ட மோசடிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகின்றவர்களின் மோசடி மிகச் சொற்பளவிலானது போன்றே தோன்றுகின்றது. அதிலும் குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை அதிகாரத் துஸ்பிரயோகம் என்ற வரையறைகளுக்குள் அடங்குபவையாகவே உள்ளன. அதாவது அரச பணத்தை தேர்தல் செலவுகளுக்குப் பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள். ஆனால் என்பிபி எதிர்க் கட்சியாக இருந்தபோது பல நூறு கோடி மோசடிகள் பற்றித்தான் ஆளும்தரப்புக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிராகச் சுமத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளும்தரப்பின் வேட்டையாடலில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவையும் சிக்க வைப்பதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் நாளாந்தம் ஆளும்தரப்பு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்து குடைச்சல் கொடுப்பவராக சஜித் மாறியிருக்கும் நிலையில் அவரது வாயை அடைப்பதற்கான முயற்சியாக இந்த நகர்வு உள்ளது என்ற விமர்சனமும் தெற்கில் உள்ளது. ஆனாலும் மீண்டும் இதிலுள்ள பிரச்சினையும் என்னவென்றால், ஏற்கனவே இரண்டு அரசுத் தலைவர்களினால் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, அந்த விசாரணைகளில் சஜித் மீது குற்றமில்லை என்று நிரூபிக்கப்பட்ட விடயத்தையே சஜித்திற்கு எதிராக என்பிபி ஆளும்தரப்பும் தூக்கியுள்ளது என்பதுதான்.

கடந்த வாரம், சஜித்திற்கு எதிரான இந்த நடவடிக்கையை ஆளும்தரப்பு தொடங்கியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மத்திய கலாசார நிதியத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் அந்த நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு குறித்த விசாரணையே அது.

சஜித்தை அரசியல் ரீதியாக அழிக்கும் நோக்கில் ஐ.தே.க தலைவர்களே இந்தக் குற்றச்சாட்டை முதலில் சுமத்தினர். அதன்படி, அந்தக் குற்றச்சாட்டு குறித்த விசாரணைகள் முதலில் 2019இல் ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ச ஆளும்தரப்பின் கீழ் தொடங்கியது.

மஹிந்த பிரதமரானவுடன், ஐ.தே.கவின் ரணில், சஜித்தை தாக்கத் தொடங்குமாறு மஹிந்தவுக்கு செய்திகளுக்குப் பின் செய்திகளை அனுப்பியிருந்தார். சஜித் ஏற்கனவே ஐ.தே.கவை விட்டு வெளியேறி, ஐக்கிய மக்கள் சக்தியைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஒரு நீண்ட அரசியல் பயணத்திற்கான வரைபடத்தை வகுத்திருந்ததால், ஐ.தே.க. தலைவர்களின் நோக்கம் சஜித்தின் அரசியலை அழிப்பதாகும்.

அதன்படி, அவர்கள் மஹிந்தவுக்கு அனுப்பிய செய்திகளில் சஜித்தின் ஆட்சிக் காலத்தில் மத்திய கலாசார நிதியிலிருந்து நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், அதுபற்றி விசாரிக்க ஐ.தே.க. உதவ முடியும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் மூலம் சஜித்தின் அரசியலை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று அவர்கள் மஹிந்தவுக்குக் காட்டியிருந்தனர்.

தொடக்கத்தில், இந்தச் செய்தி வந்தபோது, சஜித் மத்திய கலாச்சார நிதியிலிருந்து பணத்தை எடுத்து கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் கோவில்களின் கட்டுமானம் மற்றும் புனரமைப்புக்காகச் செலவிட்டதாகவும், அந்தப் பணம் மத நோக்கத்திற்காக செலவிடப்பட்டதால், அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், எனவே இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்றும் மகிந்த கூறினார். இருப்பினும், ஐ.தே.க.வின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக, இறுதியாக சஜித்தை விசாரிக்க மகிந்த ஒப்புக்கொண்டிருந்தார்.

அதன்படி, லஞ்ச ஒழிப்பு ஆணையம் மற்றும் கோப் குழுவிற்கு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இது தொடர்பாக இரண்டு விசாரணை அறிக்கைகள் வெளியிடப்பட்ட போதிலும், அவற்றில் எதுவும் சஜித் பணத்தை தவறாகப் பயன்படுத்தினார் என்று தெரிவிக்கவில்லை, மேலும் அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் கீழ் இந்த விவகாரத்தை விசாரிக்கப் போதுமான உண்மைகள் வெளியிடப்படாததால், இந்த விடயத்தை விசாரிக்கவேண்டாம் என்று முடிவு செய்துள்ளதாகக் கூறி லஞ்ச ஒழிப்பு ஆணையம் ஒரு சிறப்புக் கடிதத்தையும் அனுப்பியது.

கோட்டாவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவும், கோப் குழு மூலம் சஜித்தின் அரசியலை முடிவுக்குக் கொண்டுவர மத்திய கலாசார நிதியின் மீது விசாரணையைத் தொடங்கினார். அப்போது கோப்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவும் ரணிலுடன் இருந்தார். அதன்படி, ரணிலின் வேண்டுகோளின் பேரில் இந்த விடயத்தை விசாரிக்க ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டது, மேலும் அந்தக் குழுவால் அவதூறுகளைத் தவிர வேறு எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்போது அனுர அதுகுற்றச்சாட்டுக்களுடன் சஜித்தின் பின்னால் புறப்பட்டுள்ளார். அவராவது எதையாவது கண்டுபிடிக்கிறாரா என்று பொறுத்திருந்த பார்ப்போம்..

இடிமின்னல்
(idiminnal@gmail.com

## இலங்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தவேண்டிய 1.7 பில்லியன் டொலர்களை மீள அறவிடாமல் நமது பெரிய சகோதரர் கடன் நிவாரணம் வழங்கப் போகிறார். புலம்பெயர் மக்களைப் பயன்படுத்தியேனும், அப்பாவி தமிழ் மக்களைப் பயன்படுத்தியேனும், தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியேனும், நமது நாட்டை பொருளாதார ரீதியாகவோ, பிராந்திய ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ ஒரு நாடாக நிலைகுலைத்து இறுதியில் 29வது இந்திய மாநிலமாக உருவாக்கி, அதன் பின்னர் கிழக்கு மற்றும் வடக்கை உடைத்த உடனேயே 30ஆவது இந்திய மாநிலமாக உருவாக்கும் திட்டமே இடம்பெறுகின்றது என்றார்

## ஆடைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டால், அந்தப் பக்கத்திலிருந்தும் நாம் பாதிக்கப்படுவோம். இந்நிலையில் இந்தியாவுடன் தேவையான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகாததால், அந்தப் பக்கத்திலிருந்தும் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது. நான் கூறியது போல் செயற்பட்டிருந்தால் இந்த ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதன் போது சுட்டிக்காட்டினார்.

சந்திப்பில் கலந்து கொண்டிருந்த ஆடைத் துறையில் முன்னோடி தொழிலதிபர் ஒருவர், இப்போது ரணில் பாதையிலோ அல்லது பெலவத்தை பாதையிலோ செல்லலாமா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ராஜிதவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்வதற்கு பிடியாணை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தது.

இதற்கு பதிலளித்த கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனவல முன்னாள் அமைச்சர் இந்த வழக்கில் சந்தேகநபராயின் அவரைக் கைது செய்வதற்கு எவ்வித சட்டத் தடைகளும் இல்லையென அறிவித்தார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வதற்கான தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கி ஆளும்தரப்புக்கு இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஜூன் மாதம் 26 ஆம் திகதி முதல் தாம் வசித்த வீட்டை விட்டுச் சென்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

சந்தேகநபரான ராஜிதவைக் கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவை பெற்றுக்கொள்வதற்கான நகர்த்தல் பத்திரம் சமர்பித்து இதனை நேற்றுமுன்தினம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மன்றுக்கு அறிவித்தது.

சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதனைத் தொடர்ச்சியாகத் தவிர்த்து வந்ததாக ஆணைக்குழு நீதிமன்றுக்கு அறிவித்தது. மேலும் 15 நாட்களாக சந்தேகநபரின் கைதொலைபேசியும் செயல் இழந்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

சந்தேகநபருக்கு ஆணைக்குழுவுக்கு வருகை தருமாறு அறிவித்து அனுப்பிய கடித்ததுக்கு அவர் வர முடியாது என தெரிவித்து பதில் அனுப்பட்ட கடிதம் அல்லது மருத்துவ அறிக்கை மன்றில் சமர்பிக்கப்பட்டுள்ளதா என நீதவான் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது குறித்த ஆவணங்கள் முறைப்பாட்டு தரப்பினரிடம் இல்லை எனவும் அவை முறைப்பாட்டு கோப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டது.

குறித்த ஆவணங்கள் நீதிமன்றுக்கு சமர்பிக்கப்பட வேண்டியது அவசியம் என சுட்டிக்காட்டிய நீதவான் முன்னாள் அமைச்சர் இந்த வழக்கில் சந்தேகநபராயின் அவரை கைது செய்வதற்கு எவ்வித சட்டத்தடையும் இல்லை என குறிப்பிட்டார்.

அத்துடன் சந்தேகநபரை கைதுசெய்வதற்கு பிடியாணை உத்தரவு அவசியம் இல்லை எனவும் பிடியாணை அவசியமாயின் அதற்கான ஆவணங்களை தயாரித்து மன்றில் சமர்பிக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

## அடுத்த அமெ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் இலங்கை உள்ளடங்கலாக தெற்கு மற்றும் மத்திய ஆசியப்பிராந்திய நாடுகளுடன் அமெரிக்காவின் கொள்கைகள் தொடர்பில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி செயற்பட்டுவருகிறார்.

அதுமாத்திரமன்றி எரிக் மெயர் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் விசேட உதவி அதிகாரியாகவும், சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கேட்ஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்ஸ் அறக்கட்டளை இலங்கையுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளதாகவும், இந்நாட்டின் சிறுவர்களினதும் பெண்களினதும் ஊட்டச்சத்துத் தேவைகளை மேம்படுத்துதல், விவசாயத் துறையை மேம்படுத்துவதில் புதிய டிஜிட்டல் கருவிகளின் பயன்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தமது ஒத்துழைப்பை வழங்கக்கூடிய சாத்தியப்பாட்டைப் பற்றியும் தெளிவுபடுத்தினார்.

இதன்போது, இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் தாய்மார்களினதும், குழந்தைகளினதும் ஊட்டச்சத்தை ஊக்குவிப்பதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதிலும், அதன் மூலம் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மக்களை அதிலிருந்து மீட்டெடுக்க விசேட கவனத்துடன் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பாராட்டியதோடு, பிராந்தியத்தில் டிஜிட்டல் தொழில்நுட்ப மேம்பாட்டை முன்னெடுப்பதில் அறக்கட்டளையின் பங்களிப்பு குறித்தும் கலந்துரையாடினார்.

சிறுவர்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாடசாலைகளில் மதிய உணவு வழங்குதல் தொடர்பான அரசாங்க திட்டங்கள் குறித்து கேட்ஸ் அறக்கட்டளை பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்திய பிரதமர், இந்த நாட்டின் சிறுவர்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கேட்ஸ் அறக்கட்டளையினால் வழங்கக்கூடிய உச்சக்கட்ட ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் புதிய கல்வி முறையில் டிஜிட்டல் மாற்றத்தின் ஒரு பகுதியாக கற்பித்தல், கற்றல், மதிப்பீடு மற்றும் கல்வி நிர்வாகம் ஆகியவற்றில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் நிறுவப்பட்டிருக்கும் டிஜிட்டல் கல்விப் பணிக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் பிரதமர், கேட்ஸ் அறக்கட்டளை பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்தார்.

அத்தோடு, டிஜிட்டல் கல்விப் பணிக்குழுவின் செயற்பாடுகளுக்கும், 2026 இல் ஆரம்பிக்கவிருக்கும் உத்தேச கல்விச் சீர்திருத்தத்திற்கும் கேட்ஸ் அறக்கட்டளையின் ஆதரவையும் பங்களிப்பினையும் பெற்றுத் தருவதின் முக்கியத்துவத்தையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இதன்போது, கேட்ஸ் அறக்கட்டளையின் பிரதிநிதிகள், கல்விச் சீர்திருத்தம் மற்றும் பணிக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஒத்துழைப்பினை வழங்கக்கூடிய தரப்புகளின் பங்களிப்பினைப் பெற்றுத் தருவதாக பிரதமருக்கு உறுதியளித்தனர்.

இந்த விசேட சந்திப்பில், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதன்த்ரி, பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த, கேட்ஸ் அறக்கட்டளையின் கொள்கை மற்றும் அரச தொடர்பாடலுக்கான பிராந்திய பிரதிநிதி கலாநிதி ஜமால் கான், கேட்ஸ் அறக்கட்டளையின் பணிப்பாளரும் நிகழ்ச்சித் திட்ட ஆலோசகருமான திருமதி அர்ச்சனா வியாஸ் மற்றும் அறக்கட்டளையின் பிற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## பிள்ளைகளுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு வாங்கிக்கொண்டு பலாலி வீதியில் துவிச்சக்கர வண்டியில் ஏற முற்பட்டவேளை , வீதியில் மிக வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் அவரை மோதியுள்ளது. அதில் படுகாயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவரது இரு பிள்ளைகள் பேராதனை மற்றும் ஸ்ரீஜெயவர்த்தன புர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் நிலையில், இளைய மகள் அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 9 பு பெறுபேறுகளை

## எல்லை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் ஏழு பேரும் படகுடன் மயிலட்டி மீன் பிடி துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

## பிரித்தானியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுபடச் செய்யும் நோக்கில் ஆடை உட்பட ஏனைய பொருட்களை வரியின்றி இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

பிரித்தானியாவின் இந்த தீர்மானம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகளாவிய வர்த்தகம் கடினமாக இருக்கும் நேரத்தில் பிரித்தானியா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை ஆதரித்து வருகிறது. பிரித்தானியாவின் இந்தக் கரிசணைக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் பிரித்தானியா அதன் மூல விதிகளை தளர்த்தியுள்ளது. இதன் பொருள் பல்வேறு துறைகள் ஏற்றுமதி செய்வதற்கும், அதிக வேலைவாய்ப்புகளை

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# ஆமி உபுல் கொலைக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது

ராகம பட்டுவத்தை பகுதியில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுப்படும் நபரான ஆமி உபுல் கொலை செய்யப்பட்டமைக்கு உதவிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனேமுல்ல பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

ராகம பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 100 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 03 ஆம் திகதி இரவு முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 45 வயதான ஆமி உப்புல் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காலியில் துப்பாக்கிச் சூடு இளைஞர் ஒருவர் காயம்

காலி கொஸ்கொட பகுதியில் மேற்கொள் எப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த இளைஞரை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிள் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலப்பிட்டிய கொஸ்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹதரமன்ஹந்தியவில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அஹுங்கல்லவில் இருந்து கொஸ்கொட நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியொன்றை நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத்துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாகவும் அவர்

கொஸ்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்தத்துப்பாக்கிபிரயோகம்திட்டமிட்டகுற்றச்செயல்களுடன்தொடர்புடையதாக கூறப்படும் பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்களில் ஒருவரான 'ஷான் மல்லி' என்பவரால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இலக்கு வைக்கப்பட்டவர் குறித்த முச்சக்கர வண்டியின் உரிமையாளர் என பொலிஸார் தெரிவித்தனர். எனினும் சம்பவத்தின் போது காயமடைந்தவர் குறித்த முச்சக்கர வண்டி உரிமையாளரின் உறவினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே குறித்த முச்சக்கர வண்டி உரிமையாளரை இலக்கு வைத்து இரண்டு வருடங்களுக்கு முன்னரும் அஹுங்கல்லவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதுடன் இதன்போது அவர் காயமடைந்திருந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மூழ்கிய படகிலிருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய நெடுந்தீவுச் சுற்றுலாவிகள்

## நேற்றுப் பகல் பரபரப்பான சம்பவம்

நெடுந்தீவுக்குச்சென்று திரும்பிய சுற்றுலாவிகள் நூலிழையில் உயிர் தப்பிய சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு சொந்தமான சுற்றுலாப் பயணிகளை ஏற்றும் சிறி ரக படகில் நெடுந்தீவுக்கு சென்று திரும்பும் போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகு மூழ்கியுள்ளது. படகு மூழ்கத் தொடங்கியபோது அதில் பயணிகள் 12 பேரும் பணியாளர்கள் 2 பேரும் இருந்தனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த 12 சுற்றுலாவிகளுடன் நெடுந்தீவுக்குச் சென்று குறிகாட்டுவான் திரும்பும்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இடைக்கடலில் குறித்த சுற்றுலா படகில் இருந்து வெள்ளைக்கொடி காட்டுவதனை அவ்வழியே சென்ற நெடுந்தீவு தனியார் படகான சபரிஷ் படகு பணியாளர்கள் அவதானித்த விரைந்து செயற்பட்டு சேசமடைந்த படகில் இருந்து சகல சுற்றுலாப் பயணிகளையும் பத்திரமாக தமது படகிற்கு மாற்றி ஓரிரு நிமிடங்களில் குறித்த சுற்றுலாவிகள் படகு முழுமையாக நீரில் முழ்கிவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் கடற்படையினரது படகு குறித்த இடத்திற்கு வந்து மிட்கப்பட்ட பயணிகளை தங்களது படகில் ஏற்றிக்கொண்டு குறிகாட்டுவானை சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொழிற்பயிற்சி மட்டும் போதாது சமூக மாற்றமும் அவசியம்

இலங்கை சிறைகள் இன்று அவர்களுக்கு வடிவமைக்கப்பட்ட வரம்புகளை விட பல மடங்கு அதிகமான கைதிகளை தாங்கிக் கொண்டு நிறைந்துள்ளன. அடிக்கடி இடம்பெறும் கைதி கலவரங்கள், உயிருக்குப் பயனும் சுகாதார சிக்கல்களும், இந்தக் கொடுமையான நெருக்கடிகளை வெளிப்படுத்துகின்றன. இந்நிலையில், இலங்கை ஆளும்தரப்பு சிறைக் கைதிகளுக்காக (NVQ –National Vocational Qualification) தொழிற்பயிற்சி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்பது வரவேற்கத்தக்க முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

இந்த திட்டம் மூலம், கைதிகள் சிறையில் கழிக்கும் காலத்தினுள் வாடகை வேலையிலோ, தனியார் தொழிற்சாலைகளிலோ வேலை பெறும் திறன்களை வளர்த்துக்கொள்ள முடியும். இது, சிறையிலிருந்து விடுதலையாகும் பின், அவர்கள் சமுதாயத்தில் சுயமரியாதையுடன் வாழும் வழியைத் திறக்கலாம். ஆனால், இந்த நல்ல நோக்கத்துடனான பயிற்சி திட்டம் வெறும் கட்ட வேலைப்பாடாக முடிந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், அதைத் தொடர்ந்து செய்யவேண்டிய சமூகத் திருத்த நடவடிக்கைகள் குறித்து அலசியே தீர வேண்டும்.

முதன்மையாக, தொழிற்பயிற்சி பெற்ற கைதிகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டிய கட்டாய நிலைமை சமூகத்தில் உருவாக வேண்டும். இன்று, ஒரு குற்றவாளி சிறையிலிருந்து விடுதலையானவுடன், அவரை வேலையிற் சேர்க்க விரும்பும் நிறுவனங்கள் மிகக் குறைவு. அவ்வாறு வேலை கிடைக்காமையால், அவர்கள் மீண்டும் பழைய வழியில் திரும்புவதற்கான வாய்ப்பு அதிகம். எனவே, தொழிற்பயிற்சி பயனளிக்க வேண்டுமானால், முன்னாள் கைதிகளை வேலைவாய்ப்பில் இணைக்கும் சிறப்பு வேலைவாய்ப்பு திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இதேவேளை, சமூகத்தின் எண்ணப்போக்கிலும் மாற்றம் தேவை. முன்னாள் கைதிகள் மீதான சமூகப் பார்வையை மாற்ற, ஊடகங்கள், சமூக சேவைகள், கல்வி அமைப்புகள் மற்றும் மதநம்பிக்கைக் குழுக்கள் மூலம் சிறப்பு விழிப்புணர்வு இயக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர்கள் திருந்தும் வாய்ப்புக்கு உரியவர்கள் என்பதையும், அவர்களை மீண்டும் சமூகத்தில் இணைக்கும் பொறுப்பும் நமக்குள் இருக்கிறது என்பதையும் வலியுறுத்த வேண்டிய தருணம் இது.

அதனைத் தொடர்ந்து, முன்கூட்டியே நிறுவனங்களுடன் ஆளும்தரப்புக்கள் ஒப்பந்தங்களைச் செய்து, தொழிற்பயிற்சி பெற்ற கைதிகளை வேலைக்கு இணைக்கும் வலையமைப்பை உருவாக்க வேண்டும். குறைந்தபட்சம் தற்காலிக வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் வகையில் அரச மற்றும் தனியார் கூட்டுச் சேர்க்கை அடிப்படையில் வேலைவாய்ப்பு திட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்படவேண்டும். இது கைதிகளுக்கு மட்டுமல்லாமல், குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட சமுதாயத்துக்கே ஒரு எதிர்மறைச் சூழ்நிலையை மாற்றும் வழியாக அமையும்.

பொருளாதார நெருக்கடி மிக்க சூழலில் குற்றம் இழைக்காதவர்களுக்கே வேலைவாய்ப்பு இல்லாதபோது கைதிகளுக்கு வேலை கிடைப்பது எங்கனம் என்பதையும் ஆளும்தரப்பு சிந்திக்கவேண்டும். எனவே ஒட்டுமொத்தமாகவே இலங்கையில் வேலைவாய்ப்புக்களைப் பெருக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டியது கட்டாயம்.

கைதிகளுக்கான தொழிற் பயிற்சி என்பது திருத்தத்தின் ஒரு பகுதி மட்டுமே. திருத்தத்தை முழுமையாக வெற்றி பெறச்செய்ய வேண்டுமானால், அதற்குத் தகுந்த சமூக ஒத்துழைப்பும், வேலைவாய்ப்புவாய்ப்புகளும் வேண்டும். கைதிகளை தண்டிக்க அல்ல, திருத்துவதற்காகவே சிறை என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், திருத்தத்திற்கு வழிவகுக்கும் சமூக அமைப்புகளும் மனப்பான்மைகளும் உருவாகாவிட்டால், எந்த திட்டமும் திண்டாடிக்கொண்டே போகும்.

இனி, ஆளும்தரப்புக்கு தேவையானது திட்ட அறிவிப்புகள் மட்டுமல்ல. மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் சமூக கட்டமைப்பை உருவாக்கும் திட்ட திட்டமிடலும் அவசியம். கைதிகள் மீண்டும் குற்றத்தில் ஈடுபடாமல் வாழ ஒரு வாய்ப்பு தேவை. அந்த வாய்ப்பை உருவாக்குவது நம் அரசியலும், நம் சமூகமும் சேர்ந்து செய்ய வேண்டிய பணியாகும்.

# நயினாதீவு மாவட்ட மருத்துவமனையில் வெளிநோயளர் பிரிவுக் கட்டடம் திறப்பு

நயினாதீவு மாவட்ட மருத்துவமனையில் புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தின் திறப்பு விழா நேற்றுக் காலை சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

இந்த திட்டத்தை தொடக்கி வைத்தவர்கள் வசந்த் சிவாஜிராசாந்த் மற்றும் திருமதி ஜசிந்தா ஆகியோர், அத்துடன் ஜெர்மன் செஞ்சிலுவை சங்கம், வெண்டோர்ஃப் கிளை மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆகியனவும் தமது ஆதரவை வழங்கினார்கள்.

புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தில் , ஒரு மருந்தகம், ஒரு தடுப்பூசி அறை, ஒரு பல் சிகிச்சை பிரிவு, ஒரு தாதியர்களுக்கான அறை, சி.ளீ. ஆகியவை அடங்கும். இது ஒரு தீவிர சிகிச்சை பிரிவு, ஒரு அறுவை சிகிச்சை பிரிவு, ஒரு முதன்மை பராமரிப்பு பிரிவு மற்றும் சுகாதார வசதிகளைக் கொண்டுள்ளது. சுகாதார அமைச்சராக தீபகற்பத்திற்கு இது தான் முதல் வருகை என்றும், நாடு முழுவதும் இதுபோன்ற பிராந்திய சுகாதார மையங்களை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தயாரிப்பதற்கான விரிவான திட்டம் கடந்த



சில மாதங்களாக தயாரிக்கப்பட்டு வருவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இங்கு தெரிவித்தார்.

சுகாதார சேவை மக்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், தற்போதுள்ள சுகாதார சேவை மருத்துவர்களை மையமாகக் கொண்டது என்றும், மக்கள் மருத்துவ சேவைகளைப் பெற வெகுதூரம் செல்லப் பழகிவிட்டனர் என்றும், இந்த அணுகுமுறை யாழ்ப்பாண மருத்துவமனையில் நோயாளிகளின் வருகைக்கு வழிவகுத்தது என்றும் கூறினார். இதுபோன்ற தீவுகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து சிறந்த தரமான சேவையை வழங்க முடியும் என்றும்,

இந்தக் கட்டிடத்தின் கட்டுமானத்தை மிகக் குறுகிய காலத்தில் முடிக்க கடற்படை உழைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயம் என்றும் அவர் கூறினார்.

சிகிச்சை பெற வரும் மக்கள் வரிசையில் காத்திருக்காமல், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இது மக்களுக்குத் தேவையான சேவை என்றும் அமைச்சர் கூறினார். வட மாகாணத்தில் ஒரு தாதியர் கூட இல்லாத 33 உள்ளூர் மருத்துவமனைகள் உள்ளன என்றும், எதிர்காலத்தில் புதிய செவிலியர்களை வழங்குவதன் மூலம் இந்த குறையை இல்லாது செய்ய நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் வாகனங்கள், ஆம்புலன்ஸ்கள் பராமரிப்பு விடயத்தில் சுகாதார அமைச்சகம் பலவீனமாக உள்ளது என்றும், எதிர்காலத்தில், விலையுயர்ந்த மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் உள்ளிட்ட வாகனங்களை வழங்கும்போது, அவற்றை தொடர்ந்து பராமரிக்கும் நிறுவனங்களுடன் அந்த பௌதீக சொத்துக்களை நிர்வகிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ்களின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டிடம் ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்க வாரன்டோர்ஃப் கிளை மற்றும் ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகளின் நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்டது, அதே நேரத்தில் இந்த கட்டிடத்தின் கட்டுமானத்திற்கு இலங்கை கடற்படை மற்றும் இராணுவம், யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணம் தமது ஆதரவை வழங்கின.

வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஸ்ரீபவநந்தராஜா, வட மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் டாக்டர் வி.பி.எஸ். திபத்திரண, வட மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் இயக்குநர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன், வட மாகாண தலைமைச் செயலாளர் தனுஜா முருகேசன், வடக்கு மாகாண சுகாதாரத் துறை செயலாளர் ஜெயராணி பரமோதயன், நயினாதீவு மாவட்ட மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி டாக்டர் கே. ஜானுசன், யாழ்ப்பாண இலங்கை சிலுவை சங்கத்தின் தலைவர் பாலகிருஷ்ணன், அதியக்ஷத்திரவிராஜா, இலங்கை சிலுவை சங்கத்தின் இயக்குநர் ஜெனரல் மகேஷ் குணசேகர, வடக்கு கடற்படைப் பகுதியின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் எச்.என்.எஸ். பெரேரா, வடக்கு கடற்படைப் பகுதியின் கண்காணிப்பாளர் கொமடோர் (இ) எம்.சி.பி. திசாநாயக்க உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## சீர்திருத்தங்களுக்குப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்குவதற்கும், அந்நிய செலாவணி வரவை அதிகரிப்பதற்கும் அதிக வாய்ப்புகள் உள்ளன என்பதாகும்.

நாம் இதைப் பயன்படுத்திக் கொண்டு மிகவும் தேவையான வர்த்தக வெற்றியைக் பெற்றுக் கொள்ள ஆளும்தரப்பு முயற்சிக்க வேண்டும். இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து இறக்குமதிகளைஎளிதாக்குவதற்குதிருத்தப்பட்ட வரிதிட்டத்தைபிரித்தானியாவெளியிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. அதற்கமைய ஆடை போன்றவற்றை வரியின்றி இறக்குமதி செய்ய பிரித்தானியா தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் முப்படை தளபதிகள் உள்ளிட்ட உயர்மட்ட தரப்பினருடனான சந்திப்புக்களில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது பிராந்திய பாதுகாப்பு தொடர்பான விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பீல்ட் மார்ஷல் அசிம் முனீர் கடந்த ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தார். எவ்வாறிருப்பினும் சில காரணங்களுக்காக அந்த விஜயம் ஒத்தி வைக்கப்பட்டதாக இறுதி நேரத்தில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையிலேயே சுமார் 6 மாதங்களின் பின்னர் அவரது வருகை தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெனரல் முனிரின் வருகை, இரு நாடுகளுக்கும்இடையிலானஒருகுறிப்பிடத்தக்க இராஜதந்திர மைல்கல்லைக் குறிக்கவும், நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பு உறவுகளை எடுத்துக்காட்டுவதையும் நோக்கமாகக் கொண்டதாக அமையவுள்ளது.

அதற்கமைய இந்த விஜயத்தின் போது, இராணுவ மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஆழப்படுத்துவது குறித்தும், பகிரப்பட்ட வரலாற்றைப் பற்றி சிந்திப்பது மற்றும் மேம்பட்ட பிராந்திய பாதுகாப்பிற்கான வழிகளைஆராய்வதுகுறித்தும்இலங்கையின் உயர் மட்ட தரப்பினருடனான சந்திப்பில் பீல்ட் மார்ஷல் முனிர் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2025இல் வெளியிடப்பெற்றது